செ.வெ.எண்:197 நாள்:21.03.2018

திருநெல்வேலியில் பொருளியல் மற்றும் புள்ளியல் துறையின் மண்டல அளவிலான புள்ளி விவரங்கள் பகிர்வு தொடர்பான கருத்தரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

-----

திருநெல்வேலி தனியார் ஹோட்டல் கூட்டரங்கில் பொருளியல் மற்றும் புள்ளியல் துறையின் மண்டல அளவிலான புள்ளி விவரங்கள் பகிர்வு தொடர்பான கருத்தரங்கம் இன்று (21.03.2018) நடைபெற்றது. இக்கருத்தரங்கில் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பொருளியல்துறை மற்றும் புள்ளியல்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து பேசியதாவது:-

புள்ளியல்துறையின் மூலம் பெறப்படும் புள்ளி விவரங்கள் மிக சரியான முறையில் இருக்க வேண்டும். பொருளியல் மற்றும் புள்ளியல் துறை பல்வேறு துறைகளிடமிருந்து புள்ளி விவரங்களை ஒருங்கிணைத்து சரியான முறையில் பெற வேண்டும். அனைத்து துறையினரும் புள்ளி விவரங்களை சரியான முறையில் தர வேண்டும். புள்ளி விவரங்கள் சரியானதாக இருந்தால் தான் இழப்பீடு போன்ற நலத்திட்ட உதவிகளை முழுமையாக வழங்க முடியும். 32 துறைகளிடமிருந்து புள்ளி விவரங்களை பெறும் புள்ளியல்துறையினர் விவரங்களை சரியான முறையில் ஒருங்கிணைத்து வழங்கிட வேண்டும். என பேசினார்.

இக்கருத்தரங்கில் திருநெல்வேலி புள்ளியல் மண்டல இணை இயக்குநர் திரு.சின்னமாரி, மதுரை புள்ளியல் மண்டல இணை இயக்குநர் திரு.ஹரிகர தாஸ், வேளாண்மை இணை இயக்குநர் திரு.பெருமாள், தொழிற்சாலைகள் இணை இயக்குநர் திருமதி.நிறைமதி,தேசிய தகவல் மைய தொழில்நுட்ப இயக்குநர் திரு.ஆறுமுக நயினார், திருநெல்வேலி புள்ளியல் துணை இயக்குநர் திரு.மீராசி ரத்தன மோனி, புள்ளியல் அலுவலர் திரு.பாலசுப்பிரமணி மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பொருளியல்துறை மற்றும் புள்ளியல்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.